விலை: 1 ரூபா

# உதயசூரியன்
UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கட்டணம்
இலங்கை
ஒரு ஆண்டு 60-00
அரை ஆண்டு 30-00
இந்தியா
ஒரு ஆண்டு 75-00
ஏனைய நாடுகள்
ஒரு ஆண்டு
15 அமெரிக்க டொலர்

கதிர் 1, திருவள்ளுவராண்டு 2011, 24—10—80, வெள்ளிக்கிழமை, ஒளி—4.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS ★ LIBRARY ★
RECEIVED
1980 12 1
PERIODICALS DIVISION

## தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு
# நியூயோர்க் தமிழர் பேராதரவு

### நீலன் - வில்சன் சுற்றுலா விளைவு

**நியூயோர்க் தமிழர்கள் "தமிழர் விடுதலைக்கூட்டணி வாழ்க!" என்று நெஞ்சார வாழ்த்திஞர்கள். திரு. நீலன் திருச்செல்வம் அவர்களும் திரு. ஏ. ஜே. வில்சன் அவர்களும் அண்மையில் கூட்டணியின் நிலைப்பாட்டை அங்கு விளக்கியதைத் தொடர்ந்து அவர்கள் நமது அரசியல் நிலைபற்றி இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு பெற்ருர்கள்!**

நியூயோர்க் நகரில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடுள்ள தமிழர் மத்தியில் திரு நீலன் திருச்செல்வம் திரு. ஏ. ஜே. வில்சன் ஆகியோர் கருத்தரங்கு ஒன்றில் உரைநிகழ்த்திஞர்கள். தமிழர் விடுதலைககூட்டணி அபிவிருத்திச் சபைகளை ஏற்றுக் கொண்டது சரி என்றும்— இதை ஏற்றுக் கொண்டதால் கூட்டணி ஈழப்போராட்டத்தை கைவிட்டது என்று கூறுவது 'பச்சைப் பொய்' என்றும் அங்கு தகுந்த ஆதாரங்களோடு அவர்கள் விளக்கிஞர்கள். திரு ஏ. ஜே வில்சன் அவர்கள் கனடாவில் இருந்து நியூயார்க் வந்திருந்தார்.

நியூயோர்க் நகரில்—நீண்ட காலம் தமிழ்ஈழ விடுதலைப் போரில் ஈடுபாடுள்ள தமிழ்க் கல்விமான்கள்— ஆதரவாளர்கள் இச்கருத்தரங்கு நிகழ்ந்த பண்டபத்தில் நிறைந்திருந்தார்கள்,

திட்டமிட்டு தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு எதிராக வெளிநாடுகளில் இங்குள்ள சிலர் பத்திரிகைமூலமும்—கடிதத் தொடர்புகள் மூலமும்—செய்துவந்தபொய்ப்பிரசாரம் இக்கருத்தரங்கில் உடைத்து எறியப்பட்டது.

திரு. நீலன் திருச்செல்வம் திரு வில்சன் ஆகியோரின் சொற்பொழிவுகளால் நியூயோர்க் தமிழர்கள் தெளிவு பெற்ருர்கள்.

"தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அதன் தலைமைக்கும் சிலர் எங்கோ இருந்து சதி செய்வதுபோல் தெரிகிறது. இனி நாங்கள் விழிப்பாக இருப்போம்" என்று கருத்தரங்கின் முடிவில் ஒரு பிரமுகர் கருத்துத் தெரிவித்தார்

இக்கருத்தரங்கு நிகழ்ந்ததைத் தொடர்ந்து — தமிழர் தலைவர் அமிர் அவர்களுக்கு ஏராளமான தந்திகளும் கடிதங்களும் தொலைபேசி அழைப்புக்களும் நியூயோர்க்கில் இருந்துவந்து கொண்டிடிருக்கின்றன. அங்கிருந்து தலைவர் அமிருக்கு வந்த ஒரு செய்தி இது: "நாங்கள் உங்கள் கூடவே இருக்கிறோம்—தொடர்ந்து இயக்கத்தை முன் எடுத்துச் செல்லுங்கள்!"

நியூயோர்க்கில் இயங்கும் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. எட்வர்ட் பெனடிக்ற் அவர்கள் அண்மையில் சிறீலங்கா நாடாளுமன்றத்தில் சட்டமான அபிவிருத்திச்சபை மசோதா பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்—

தமிழ் மக்களுக்கு இச்சட்டத்திஞல் எவ்வளவு நன்மை உண்டு என ஆராய்ந்த பின்பே இதனை நாம் ஆதரிக்கின்றோம்: இச்சட்டத்தில் சில நல்ல இயல்புகள் இருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டதும் இங்கே கவனிக்த்தக்கதாகும்.

## நெஞ்சம் இனிக்க நெடுமிடல் எழுதுகிறர்

ஆசிரியர், 'உதய சூரியன், அவர்கட்கு!

வணக்கம் 'உதயசூரியன்' கண்டேன்.

தமிழீழ விடுதலை இயக்கத்தில் எல்லா முனைகளிலும் பயனுள்ள புதிய முயற்சிகள் தொடங்கப்பட்டிருப்பதைக் காண்கிறேம். ஓராண்டு காலமாக நிலவிவந்த தொய்வு அகன்று விட்டது. இப்பொழுது இயக்கம்......இயக்கம்... எங்கு நோக்கினும் இயக்கம்... இது எங்களுக்கு மகிழ்ச்சியூட்டுகின்றது.

—இவ்வாறு தமிழகத்திலிருந்து தமிழர் நட்புமன்ற இயக்குநர் திரு. நெடுமிடல் நமது நெஞ்சம் இனிக்கும் வண்ணம் கடிதம் எழுதியுள்ளார்.

# மக்களாட்சி முறைக்கு மற்றோர் மரண அடி!

## சிறிமாவோவின் குடியுரிமைபறிப்புக்கு தலைவர் சிவசிதம்பரம் கண்டனம்!

**"திருமதிசிறிமா பண்டாரநாயக்கா' திரு.பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரின்குடியியல் உரிமைகளை நீக்க அரசு தீர்மானித்திருப்பது அரசியல் பழிவாங்கலே ஆகும்.**

குற்றவாளியாகக் கருதப்படுவோர், தாம் குற்றவாளிகள் அல்லர் என்பதைநிருபிக்கவாய்ப்பு அளிக்கவும் அரசு மறுத்து விட்டதன் மூலம், தனது செயல் அரசியல் பழிவாங்கலே என்பதை அது ஊர்ஜிதப்படுத்துகிறது"

இவ்வாறு கடந்த வியாழனன்றுநாடாளுமன்றத்தில் கூறிஞர் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம்.



முன்னுள் பிரதமரும் அத்தனகலை எம். பியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா முன்னுள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காஆகியோரின் குடியியல் உரிமைகளை ரத்துச் செய்யும் பிரேரணைகள் மீதான விவாதத்தில் அவர் பேசிஞர்.

தொடர்ந்துபேசுகையில்அவர் கூறியதாவது:—

"லஞ்சக் குற்றச்சாட்டுகளுக்காகவும் முன்பு நாடாளுமன்றம் சிலருக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளதென்று வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இங்கு பேசுகையில் குறிப்பிட்டார் குற்றக்கோவைச் சட்டத்தின்கீழ் அதற்கு வகை செய்யப்பட்டு இருக்கிறது. அதையும் இதையும் ஒப்பிடுவது பொருந்தாது.

பொது வாழ்வைத் தூய்மைப் படுத்துவதே சம்பந்தப்பட்டஇருவருக்கும் தண்டனைவழங்குவது

—8- ஆம் பக்கம் பார்க்க

## சிறீலங்கா ஆட்சியின் சின்னத்தனம்!

சிறிலங்கா நாட்டின் முன்னுள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை ஏழு ஆண்டுகளுக்குப் பறித்துவிட்ட ஜனுதிபதி—ஜே. ஆர். ஆட்சியின் செயல் மிகவும் மோசமான தெனக்குறிப்பிட்டுள்ளார் இந்தியப் பிரதமர் திருமதி— இந்திராகாந்தி அவர்கள்!

பத்திரிகை நிருபர்கேட்ட கேள்வி யொன்றுக்கு மேற்கண்டவாறு பதிலளித்த பாரதப் பிரதமர், தாம் இது குறித்து பெரிதும் வேதனை அடைந்துள்ளதாகவும் திருமதி சிறிமாவோவின் குடும்பம் துன்புறுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்!

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

# அமைச்சர் காமினியின் ஆசைவார்த்தைகள்

அண்மையில் யாழ்ப் பாண மாவட்டத்திற்கு வருகைதந்த அமைச்சர் காமினி திசநாயக்கா அவருடைய உத்தியோகத்தர்களும் மகாவலி அபிவிருத்திச்சபையைச் சேர்ந்தவர்களும், ஐ. தே. கட்சி ஏஜென்ற் யோகேந்திரா துரைசுவாமி அவர்களும், அரசியல் பச்சோந்திகளும் சேர்ந்து நடாத்திய வரவேற்புக்களாலும் மாலை மரியாதைகளாலும், பல்சுவை விருந்துகளாலும், மனம் குளிர்ந்து பல கருத்துக்களை அள்ளித் தெளித்து விட்டுச் சென்றிருக்கிறார்.

அவருக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்த சிங்கள ஏகாதிபத்தியங்களின் அமைச்சர்கள் பேசிய பாணியிலேயே அவரும் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். மகாதேவா பாலத்தை விரைவில் கட்டிமுடித்துத் தருவதாகவும், மகாவலி நீரை வடக்கே யாழ்ப்பாணத்துக்குக்கொண்டு வருவதாகவும், யாழ்ப்பாணக்குடா நாட்டில் போதியநீரும் நிலமும் இல்லாத குறையைத் தீர்ப்பதாகவும் இன்னும் பலவற்றைச் செய்வதாகவும் அவர் கூறியதாகபத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருக்கின்றன.

முன்னர் வந்த அமைச்சர்கள் சொல்லிவிட்டு உருப்படியாக எதையும் செய்யாமல் விட்டுவிட்டார்கள். அவர்களுடைய பேச்சைப்போல இவருடைய பேச்சும் வெற்றுப் பேச்சாஎன்பதை விரைவில் காலம் காட்டும்!

தமக்குப் பெரிய வரவேற்புக் கிடைத்துவிட்டதே என்று மகிழும் அமைச்சர் காமினி திசநாயக்காவுக்கு முன்னை நாள் அமைச்சர் இலங்கரத்தின இங்குவந்துவ்ரவேற்புப்பெற்று கூறியதை நினைவூட்டுதல் பொருத்தமானது. கழுத்து நிரம்ப மாலைக்கு மேல் மாலை பெற்ற இலங்கரத்தின தமது 60 வருடகால வாழ்வில் இவ்வளவு மாலைகளைத்தான் சுமக்கவில்லை என்று கூறி அன்று பெருமிதம் அடைந்தார். இன்று அவர் எங்கே? அவருக்கு மாலைசூட்டி மதிமயங்கச் செய்தவர்களில் பலரே அமைச்[...] காமினி திசநாயக்காவுக்கும், கொடி, குடை ஆலவட்டம் தூக்கி மாலை இட்டார்கள்என்பதை அமைச்சர் காமினி திசநாயக்காவுக்குச் சொல்லிவைக்கவிரும்புகிறோம்;

## பறவைகளே! பறவைகளே!

முன்னே போய்க்கொண்டிருக்கும் வழிகாட்டிப் பறவையின் பின்னே போய்க்கொண்டிருக்கிறோம்.

எங்களுக்கு முன்னே பறக்கின்ற அந்தப் பறவை ஒரு காலத்தில் செல்வாவுக்குப் பின்னே பறந்தது.

அன்று அந்தப் பறவை செய்ததை இன்று நாங்கள் செய்கிறோம்.

தலைவராக இருந்து மட்டுமல்ல—பழைய தொண்டராக இருந்தும்—தலைவர் அமிர் வழிகாட்டுகிறார்.

மாபெரும் வழிகாட்டியின் பின்னால் நாங்கள் மாபெரும் இயக்கமாய்ப் பறக்கிறோம்.

ஒரு தலைவனுக்குப் பின்னால் ஒழுங்காகப் பறப்பது ஒரு தலைவனுக்குத் தருகின்ற மரியாதை என்று நினைக்கிறார்கள்— இல்லை—அது ஒரு இயக்கத்துக்குத் தருகின்ற மரியாதையாகும்.

வேருக்கு நீங்கள் விடுகின்ற நீர் மரத்துக்கே!

உங்கள் இயக்கத்தைப் பலப்படுத்துங்கள் உங்கள் தலைவனைப் பலப்படுத்தியவர்கள் ஆவீர்கள் என்று சொல்லுவதும் சரி—உங்கள் தலைவனைப் பலப்படுத்துங்கள் உங்கள் இயக்கத்தைப் பலப்படுத்தியவர்கள் ஆவீர்கள் என்று சொல்வதும் சரி.

உடலில் உயிர் இருக்கிற இடம் எனக்குத் தெரியாது— ஆனால் இயக்கத்தில் உயிர் இருக்கிற இடம் எனக்குத் தெரியும் — அதுதான் தலைமை.

பறவைகளே! பறவைகளே!

நமது இயக்கத்தைப் பொறுத்தவரை அமிர் அண்ணன் நமது தலைவராய் இருக்கிறார்.

பெரிய தலைவரை நாம் பெற்றிருக்கிறோம்.

அனுபவத்துக்கு இன்னொரு பெயர் அமிர்.

போர்க்களத்தில் விதைக்கப்பட்டு போர்க்களத்தில் அறுவடையான நெல் அது.

தன்னுடைய குடும்பம் முழுவதையும் நெருப்பில் இறக்கி நிற்கிறவர் என்னுடைய தலைவர்,

அவருடைய வாழ்க்கை வெளிச்சத்தில் நிகழ்வது.

ஒருவர்கூடக் களங்கம் காண முடியாத ஒருவர் அவர்.

சேறுபடாத செந்தாமரை அது; ஊறு படாத ஒளி வைரம் அது.

தியாகம் என்ற ஒன்றைத்தவிர அனைத்தையுமே தியாகம் செய்தவர் தலைவர்.

அவரில் குறை உண்டு என்று ஆராய்கிறவன் நிலவில் கறை உண்டு என்று ஆராய்கிறவனே.

பறவைகளே! பறவைகளே!

தனிமனிதரை நம்பக்கூடாது என்று ஒரு புதிய தத்துவம் இப்போது பேசப்படுகிறது.

தனிமனிதர் முக்கியமல்ல என்று தந்தை செல்வா சொன்னதாக அந்தத் தனி மனிதரையும் துணைக்கு அழைக்கிறார்கள்.

பறவைகளே! பறவைகளே!

இந்த விதண்டாவாத ஜீவன்களிடம் கேட்கிறேன்— லெனினைத் தலையில் வைத்துச் சுமப்பீர்களே அவர் தனி மனிதர் இல்லையா?

காந்தி என்ற தனிமனிதர்தானே இந்தியாவின் காவல் தெய்வமானார்.

அயர்லாந்து மக்கள் டிவேலரா என்ற தனிமனிதரை அடித்து விரட்டினார்களா? வியட்நாம் மக்கள் ஹோசிமின் என்ற தனி மனிதரை வீசி எறிந்தார்களா?

தனிமனிதர் தனிமனிதர் என்கிறீர்களே — மாசேதுங் என்ன இரண்டு மனிதர்களா?

பறவைகளே! பறவைகளே!

பேசுகிறவன் ஒவ்வொருவனும் தன்னைப் பெரிய மனிதன் என்று நினைத்துக் கொண்டே பேசுகிறான்.

பொய்யோ மெய்யோ — சரியோ பிழையோ என்று ஆராயாமலே குய்யோ முறையோ— ஐயோ ஐயோ என்று கூச்சல் போடுகிறான்.

பார்த்தீர்களா—ஜெயவர்த்தன அபிவிருத்திச்சபை தமிழர் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார் என்கிறான் ஒருவன்,

கேட்டீர்களா — பிரேமதாசா ஈழப்போராட்டம் கைவிடப்பட்டுவிட்டது என்று பேசியிருக்கிறார் என்கிறான் அடுத்தவன்,

படித்தீர்களா — காமினி திசநாயக்கா கூட்டணி விடுதலையை மறந்துவிட்டது என்று முழங்கியிருக்கிறார் என்கிறான் இன்னொருவன்.

அடபாவிகளே! இந்த மூன்று மனிதர்களும்தான் உங்கள் தலைவர்களா?

இவர்களுடைய வார்த்தைகளை வேதம் என்று ஏற்றுக் கொள்கிறீர்களே — உங்களுடைய வாழ்க்கையை புனிதம் என்று எப்படி நான் ஏற்றுக்கொள்வது?

அமிர் அண்ணன் — தமிழர் தலைவர் — கூறுவதைப் 'பொய்' என்கிறீர்கள்—ஜெயவர்த்தன—பகைவர் தலைவர் கூறுவதை 'மெய்' என்கிறீர்கள்,

பறவைகளே! பறவைகளே!

களத்தில் வலிமைமிக்கவர்களாய் நிற்கிறநாம்—இப்படியான உளத்தில் தெளிவற்றவர்களாய் நிற்கிறவர்களையும் சந்திக்கிறோம் — கவலைப்படாதீர்கள் நிலத்தில் இப்படியானவர்கள் எல்லா நாடுகளிலுமே நிறைந்திருக்கிறார்கள்.

காரியம் செய்கிறவனுடைய எண்ணிக்கையைவிட— விமர்சனம் செய்கிறவனுடைய எண்ணிக்கையே பெரிதாக இருக்கிறது.

முப்பது ஆண்டுகளில் உருவான தலைவர் அமிர் அவர்களை மூன்று நாட்களில் உருவான விமர்சகன் 'இவர் தலைவரா?' என்கிறான்.

பறவைகளே! பறவைகளே!

நாம் இந்த சலசலப்புக்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள் ஏனென்றால் நமது தலைவரை நாம் அறிவோம்!

அவரைப் பின் தொடர்வது அனுபவத்தைப் பின்தொடர்வதாகும்.

நிதானமாக நின்று விசிறும் அந்த இறக்கைகளின் பின்னே நிதானமாக நின்று உமது பணி நிகழ்வதாக.

வாருங்கள்;

நிறைய வேலைகள் களத்தில் காத்து நிற்கின்றன.

கவிஞர் காசி ஆனந்தன்

## சிலை அமைப்புக் குழுவின் வேண்டுகோள்

அமரர் வன்னிய சிங்[...] அவர்களின் சிலைநிறுவுவதற்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்கவும், அதன்பேரால் கணக்கொன்றை ஆரம்பிக்கவுமான பொறுப்பினை திரு. அ. அமிர்தலிங்கம் பா.உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை பா, உ. ஆகியோரிடம் வழங்கப்பட்டுள்ளது.

அமரரின் சிலைநிறுவுவதற்கு வேண்டிய பணத்தைப் பொது மக்களிடமிருந்து சேகரிக்க முடிவுசெய்துள்ளோம், ஆர்வமுள்ள ஒவ்வொருவரும்-த.வி. கூட்டணிக் கிளைகளும் தங்களால் ஆன பணத்தைச் திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம்.

இதுபற்றிய மேலும் தகவல் பெறவிரும்புவோர் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இவ்வாறு-அமரர் வன்னிய சிங்கம் சிலை அமைப்புக் குழுவின் இணைச்செயலாளர் திரு க. சின்னத்துரை அவர்கள் கேட்டுள்ளார்.




# இளைஞர்களே எங்கள் பலம்

தந்தை செல்வாவுடன் அரசியல் பணியில் நான் ஈடுபட ஆரம்பித்தபோது இருபது வயது இளைஞனாக இலங்கைப் பல்கலைக்கழகத்தில்பயின்றுகொண்டிருந்தேன். உலகெங்கும் சிதறிப்போய்க் கூலிகளாக குற்றேவல் புரிவோராக— கரும்புத் தோட்டத்தில் கண்ணீர் வடிப்போராக— தேயிலைத்தோட்டங்களில் அட்டைக்கடிக்கும் அரிய வழி நடைக்கும் மத்தியில் அற்ப ஊதியத்திற்கு உழைத்துழைத்து உருக்குலைவோராக—படித்துப் பட்டம்பெற்று உயர்ந்தும் உரிமையற்று அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆட்சி அமைப்பில் அங்கங்களாக—தமக்கென்று நாடற்று வாழும் தமிழினத்தின் நிலையைப் பற்றிப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் சிலர் சிந்தித்தோம். அச்சுவேலி ஆசிரியர் கனகசபாபதி என் எண்ணங்களுக்கு உரமூட்டுபவராகவிளங்கினார். நான்தலைவராக இருந்த பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தில் ஓர் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினோம் மட்டக்களப்பையும் அனுராதபுரத்தையும் தெற்கெல்லையாகவும்வேங்கடத்தைவடக்கெல்லையாகவும் கொண்ட ஓர்சுதந்திரத்தமிழகம்நிறுவப்படவேண்டுமென்றும் சேதுவை மேடுறுத்தி வீதி சமைக்க வேண்டுமென்றும் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றினோம். நாம் இதைத்தீர்மானித்தது யாழ்ப்பாணத்திலல்ல—கொழும்பில்! இன்று நேற்றல்ல—1947ஆம் ஆண்டில்! சிங்கள மாணவர்கள் மத்தியில் இச்செய்தி பரவியது. பல்கலைக்கழக யூனியன் விடுதியில் நடந்த ஒருசம்பவத்தைச் சாக்காக வைத்து விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டேன் விடுதிமாணவர் மன்றக் கூட்டத்தில் சிங்களப் பேராசிரியர் ரத்தினசூரியா முன்னிலையில் எமக்கு ஒரு தனிப்பல்கலைக்கழகமும் தனிநாடும் வேண்டும் என்று கூறி வெளியேறினேன். முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குமுன் நடந்த இச்சம்பவத்தை நான் கூறுவது எனது பெருமைக்காக அல்ல. எனது அன்றைய உணர்ச்சியை இன்றைய தம்பிமாரோடு பகிர்ந்து கொள்வதற்கே.

இதே நேரத்தில் 1947ம் ஆண்டு நடந்த தேர்தலில் தமிழ் காங்கிரஸில் காங்கேசன்துறை வேட்பாளராகப் போட்டியிட்டுத் தந்தை செல்வநாயகம் பாராளுமன்றம் சென்றார். யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எல்லோருக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பில் இலங்கையில் தமிழ்ப் பிரதேசத்தை சுயாட்சி மாநிலமாகக் கொண்ட இணைப்பாட்சி நிறுவப்படவேண்டுமென்று தந்தை செல்வா முதன்முதலாகக் குரல் எழுப்பினார். அவரைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்திற்கு அழைத்தேன். என்கனவு அவருடைய கூற்றுக்கு எத்தனையோபடி அப்பால் நின்றாலும் நடைமுறைச்சாத்தியமான ஒரு திட்டத்தைக்கூறும் தலைவரின் வழியில் உழைப்போமென்று அன்று தொடக்கம் அவர் வழியில் செல்ல முற்பட்டேன்.

விடுதலை இயக்கத்தின் உந்து சக்தி இளைஞர்களே—உயிர் மூச்சு மாணவ மணிகளே. ஆனால் தமிழ் இனத்தின் உரிமை உணர்ச்சி கருக்கொள்ள ஆரம்பித்த அக்காலத்தில் குறிப்பாகப் பல்கலைக் கழக மாணவர் மத்தியில் ஓர் மாயை குடிகொண்டிருந்தது. தமிழன், தமிழ் என்று சிந்திப்பது, பேசுவது வகுப்புவாதம் என்று வையப்பட்டது. ஈழத்தமிழ் மக்கள் ஓர் தனித்தேசிய இனம் என்ற சிந்தனையை ஊட்டத்தவறிய அதற்கு முந்திய அரசியல் இயக்கங்களின் போக்கினால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். பல்கலைக் கழகத் தமிழ் மாணவரிற் பெரும்பாலோர் இனப்பற்றோ மொழிப்பற்றோ அற்று உலகப்புரட்சி பேசுவோராக இருந்தனர். விரிந்த மனப்பான்மை கொண்ட மார்க்சீய புரட்சிவாதி என்று தம்மைக் கூறிக் கொள்வதையே நாகரிகமாகக் கருதினர். தமிழரின் உரிமை பற்றிப்பேசுவது குறுகிய வகுப்புவாதமென்று எள்ளி நகையாடப்பட்டது. 1949ம் ஆண்டு பல்கலைக்கழக மாணவர் மன்றத்தில் இணைப்பாட்சி பற்றி வாதிட வந்த தந்தை செல்வநாயகம் கேலிக்கும் கூக்குரலுக்கும் மத்தியில் பேசவேண்டியிருந்தது.பல தமிழ் மாணவர்களே எதிர்த்து வாதிட்டனர், அப்போது சட்டக் கல்லூரி மாணவனாக இருந்து அங்கு சென்றிருந்த நான் பொறுக்கமுடியாது மேடை மீது ஏறிப்பேசினேன். இயக்கரும் நாகரும் வாழ்ந்த சரித்திரத்திற்கு முற்பட்டகாலத்திலேயே இலங்கை இரண்டு அரசுகளாகப் பிரிந்திருந்ததை எடுத்துக் கூறினேன். நரிக்கூட்டமென ஊளையிட்டது மாணவர் கூட்டம்.

தமிழ் மாணவர் சமுதாயத்தில் 1956ம் ஆண்டின் பின் ஓர் புதிய திருப்பம் ஏற்பட்டது. தமிழ் மொழி உரிமைக்காக நாம் நடத்திய போராட்டங்கள் அவர்களுக்கு விழிப்பை ஏற்படுத்தின. 1957ம் ஆண்டு தமிழ் பேசும் மாணவர் மன்றம் பல்கலைக்கழகத்திலிருந்து எமது போராட்டங்களுக்கு ஆதரவாக வந்திறங்கியது. ஆனால் சிறிது காலத்தில் அதன் உத்வேகம் அடங்கியது. அதை முன்னின்று நடத்தியோர் பலர் பெரும் பதவிகளில் இன்று பணத்துடன் வாழ்கின்றனர்.

1961ம் ஆண்டு கச்சேரி வாசல்களில் நாம் ஆரம்பித்த மறியல் போராட்டம்—எம்மீது நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதல் — இளம் உள்ளங்களைத் தொட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் சட்டக்கல்லூரி மாணவர்கள் கூட்டம் கூட்டமாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கினர், கல்லூரிகளின் உயர் வகுப்பு மாணவர்கள் வகுப்பறைகளைவிட்டு வெளியேறி திரள் திரளாக மறியல் போராட்டத்தில் இறங்கினர். புகைவண்டிகளில் பிரயாணச் சீட்டின்றி ஏறினர். பஸ் வண்டிகளில் ஏறிப்பணங்கொடுக்க மறுத்தனர். அப்படி உரிமைப்போரில் ஈடுபட்ட தம்பிமாவை சேனாதிராசா போன்ற பலர் இன்றும் இயக்கத்தில் இருக்கின்றனர். ஆனால் அவசர காலச்சட்டம்பிரகடனம் செய்யப்பட்டு- இராணுவ காட்டாட்சி கட்டவிழ்த்துவிடப்பட்டு நாமெல்லாம் கைது செய்யப்பட்டுப் பனாகொடை இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதோடு அந்தவேகம் அடங்கிவிட்டது.

எமது மாணவர்களின் சிந்தனை இனவிடுதலை புரட்சிப் பாதையில் 1970ம் ஆண்டின் பின் தீவிரமாகத் திரும்பியது. சிவகுமாரன், சத்தியசீலன் அரிய ரத்தினம்முத்துக்குமாரசாமி போன்றோரின் வழிநடத்தலில் தோன்றிய மாணவர் பேரவை தமிழ் மாணவர் மத்தியில் வேகத்தை ஊட்டியது பல்கலைக்கழக உயர்வகுப்பு மாணவர் மத்தியில் ஆரம்பித்த இயக்கம் பல்வேறு வகைப்பட்ட இளைஞர்களையும் கவர்ந்திழுத்து இளைஞர் பேரவையாக வளர்ந்தது. தலைமறைவு இயக்கங்கள் பல இந்த நாட்டிலும் வெளிநாடுகளில் வாழும் எமது இளைஞர்கள் மத்தியிலும் வளரத்தொடங்கின. எழுபதுகளில் எமது இளைஞர் வீரதீரச் செயல்கள் பலவற்றைச்செய்தனர் அவர்களுடைய வீரமும் தியாகமும் ஆளுவோரை அதிர்ச்சி அடையச்செய்தன; தமிழ் மக்களை எழுச்சிகொள்ளச் செய்தன. தந்தை செல்வா வளர்த்த எமது இயக்கம் சாத்வீக காந்திய வழிகளிலேயே இயங்குவது. இளைஞர் இயக்கங்கள் சில அவ்வழியை விட்டு பகவத் சிங் உத்தம்சிங், வாஞ்சிநாதன் போன்றோர் பாதையில் சென்றன. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இந்த இயக்கங்களுக்கும் செல்லும்வழியில் வேற்றுமை இருந்தாலும் இலட்சியத்தில்குறிக்கோளில் எவ்வித முரண்பாடும் எழவில்லை.

1975ம் ஆண்டின் பின் மெல்ல மெல்லச் சில சித்தாந்த முரண்பாடுகள் இறக்குமதி செய்யப்பட்டன. விடுதலையை நாடிநிற்கும் நமது இயக்கம் சுரண்டலற்ற—சாதி சமய பேதமற்ற— மதச் சார்பற்ற விஞ்ஞான சோஷலிச சித்தாந்தத்தையே தன் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. ஆனால் தேசிய இன விடுதலையை நாடி நிற்கும் நாம் முற்றுமுழுதாகத் தொழிலாளர் வர்க்கத்தை மாத்திரம் கொண்ட—வர்க்கப்புரட்சியைமுன்வைத்து இயங்குகிற—ஓர் இயக்கமாக இருக்க முடியாது இந்த நிலையை மாமேதைலெனினே ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இளம் உள்ளங்கள் சமதர்மக் கருத்துக்களால் கவரப்படுவது இயல்பு. விடுதலை இயக்கத்தையும் சமதர்ம இலக்கையும் ஒருங்கே எடுத்துச் செல்லும் எமமை முதலாளித்துவ வாதிகள் என்று மாணவ சமுதாயத்தின் முன் காட்டச் சிலசக்திகள்முனைந்து நிற்கின்றன. இலங்கையில் பெரும்பாலானவை முந்திய அரசு இழைத்த தமிழ் இன விரோதச் செயல்களை ஆதரித்த இனத்துரோக சக்திகளே. இனவிடுதலையை மறந்த வர்க்கப்புரட்சிக்குத்தமிழ் ஈழம் என்ற போர்வையில் தமிழ் இளைஞர்களை இழுத்துச் செல்வதே இவர்கள் நோக்கம் இச்சக்திகள் இங்கும் வெளிநாடுகளிலும் எமது இளைஞர் அணிகளை ஊடுருவி நின்றன இளைஞரை நம்மிலிருந்து பிரித்துவிட 1978ஆம் ஆண்டுகளிலேயே முயன்றன. இன்றுதமிழர் விடுதலைக் கூட்டணிக்கு விரோதமாகக் கருத்தரங்குகளை நடத்துவோரின் பட்டியலைப் பார்த்தால் சிலர் சுயாட்சிக் கழகத்தில் நின்று முன்பே எம்மைத்திட்டியவர்கள். சிலர் 1975ம் ஆண்டிலேயே எம்மை விட்டுப் பிரிந்தவர்கள், சிலர் 1978ம் ஆண்டில் தனிவழிசென்றவர்கள். இளைஞர் சக்தியைக் கூட்டணியிலிருந்து பிரிப்பதற்கு இதுவரையும் தாம் எடுத்த முயற்சிகளில் தோல்வி கண்டோர் மாவட்ட அபிவிருத்தி சபையை ஒட்டி கூட்டணிக்குள் எழுந்த கருத்து வேற்றுமையைப் பயன்படுத்தி இயக்கத்தை உடைத்து இளைஞர்களைத் தமதுவர்க்கப்போராட்டத்தை மாத்திரம் நோக்காகக்கொண்ட, இன விடுதலையை இரண்டாம் பட்சமாகக் கருதும், பாதைக்கு இழுத்துச் செல்லப் பார்க்கின்றனர்.

'தினபதி' போன்ற பத்திரிகைகளில் வரும் பொய்யும் புனைந்துரையும் கலந்த செய்திகளை வைத்து மாணவ மணிகளை எம்மிலிருந்து பிரிக்கப் பார்க்கின்றனர். சிறில் மத்தியூ எமது மாணவர்களை வசைபாடியபோது சீறியெழுந்துபாதுகாத்தவர் எமது தலைவர் சிவா. எமது மாணவமணிகளை யாரும் குறைகூற நாம் இடமளிக்கமாட்டோம். தவறானபாதையில் சிலர் எனது கொடும்பாவியைக் கொழுத்தியதைப்பற்றி யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் கூடியவர்களைத் தம்பி ஆலாலசுந்தரம் எடுத்துச்சொல்லி ஒருசிலரின் தவறுகளால் எமது செல்வங்களாகிய மாணவர் இப்படி அவப்பேருக்கு ஆளாகக் கூடாது என்று கூறியதைத் திரித்து சுந்தரமாக எமக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையே வெடிப்பை ஏற்படுத்தச் சிலர் முயற்சிக்கிறார்கள். அத்தோடு சில சித்தாந்தக் குழப்பங்களைப் புகுத்தி இங்கும் வெளியிலும் எமது தீவிரவாத இளைஞரை சிலர் கூறுபோட்டு வருவது வேதனை தருகிறது. இலட்சியப் பற்றுள்ள தமிழ் இதயங்கள் இச்சூழ்ச்சிகளுக்குப் பலியாகி விடக் கூடாது என்றும்வேண்டுகின்றேன்.எமது இளைஞர்களே எமது பலம், மாணவமணிகளே எமது விடுதலை விளக்குகள் சட்டம் தயாராகும் முன்பே மாவட்ட அபிவிருத்திச் சபைபற்றிப் பல்கலைக்கழகத்தில் சிலரால் நடத்தப்பட்ட ஆய்வரங்கு போன்றபல விடயங்கள்பற்றியஉண்மைகளை அடுத்தவாரம்இலட்சிய இதயங்களோடு பகிர்ந்து கொள்வேன்.

**அண்ணன் அமிர்**

# பாவம் - ஜனாதிபதியின் பணயக் கைதிகள்!

## ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு திருமதி சிறிமாவோ அனுதாபம்!

**என்னை இந்தச் சபையில் இருந்து அகற்றினாலும் அரசியலில் இருந்து அகற்ற முடியாது என்பதை ஐக்கியதேசியக்கட்சியினருக்குச் சொல்லி வைக்கின்றேன்.**

இவ்வாறு அத்தனகல எம். பி. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த வியாழக்கிழமை (16,10.80)நாடாளுமன்றத்தில் தமது இறுதிப் பேச்சை நிகழ்த்தும்போதுகூறினார் அவர் தொடர்ந்து பேசுகையில்—

நான் பதவிக்கு வரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சில சக்திகளின் சதி இடம் பெற்றிருக்கிறது, இப்போது நடப்பது எனக்கு எதிரான ஒரு சதி அல்லவா என்று ஆராயுமாறு அரசு தரப்பு அங்கத்தவர்களைக் கேட்கிறேன்,

ஜனாதிபதி கமிஷனின் அறிக்கை எப்போது அச்சிடப்பட்டது, இங்கு அங்கத்தவர்களும் அமைச்சர்களும் இந்த அறிக்கையைப்படித்துவிட்டுத்தானா பிரேரணையை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளனர், அல்லது ஆட்சியின் உத்தரவின் பேரில் ஆதரிக்கின்றனரா? இந்த நடவடிக்கையை ஐ.தே. கட்சியின் ஆதரவாளர்களே எதிர்க்கின்றனர்,

அதர்மிஷ்ட ஆட்சி நடத்த பார்க்கும் சர்வாதிகாரத் தலைமையின் நடவடிக்கையேஇது.

எனது ஆட்சியின் குறைபாடுகள் குறித்து பொது மக்களே தீர்ப்பு அளிக்க முடியும் ஒரு கமிஷன் அல்லது நீதிமன்றம் முடிவு எடுக்க முடியாது. நீதிமன்றத்தால் இது முடியும் எனில் கடந்த வேலை நிறுத்தத்தின்போது ஜனாதிபதி அவசர காலச்சட்டத்தைப் பிறப்பித்ததற்காக அவர்மீது வழக்குப்போட முடியும்.

இதற்கு முன்னர் இந்தச் சபையின் அங்கத்தவர்கள்சிலரின் குடியுரிமை ரத்துச் செய்யப்பட்டது, லஞ்சம் முதலிய குற்றச்சாட்டுக்களின் பேரிலாகும். ஆனால் எனக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டேயாகும்,

இன்று சுதந்திரமாக வாக்கு அளிப்பதானால் இந்தப் பிரேரணை நிறைவேறமாட்டாது. நீங்கள் இன்று ஜனாதிபதியின் பணயக் கைதிகளைப்போலிருக்கிறீர்கள். நீங்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தால் இங்கிருந்து வெளியேற்றப்படுவீர்கள். இந்தச்சபையில்இருப்பவர்கள் கௌரவமான அங்கத்தவர்கள் என்பதால் .இந்தப் பிரேரணையில் பங்காளிகள் ஆக வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் இன்று இந்தச் சபையில் இருந்து வெளியேறி மக்கள் நீதிமன்றத்தின் முன் மக்களின் தீர்ப்புக்காகச் செல்[illegible] இருக்கிறேன். இங்கிருந்து என்னை வெளியேற்றினாலும், அரசியல் பூமியில் இருந்து என்னை வெளியேற்ற முடியாது,



# அலைகள் ஆர்ப்பரிக்கின்றன

அந்நியரான ஆரியர்—தண்டகாரண்யத்தைக் கடந்து தமிழகத்துள் தமது காலடியை வைக்கச் செய்த முயற்சியே 'இராமாயணம்' எனும் இதிகாசம்!

இதை இன்னொருவகையிற் சொன்னால்—

இருவேறு இனங்களுக்கிடையே நடந்த ஒரு போர்— தன் மானம் காக்க — தமது மண்ணில் அந்நியரின்தாள்படாது தடுக்க—தமிழர் எனச் சொல்லப்படும் திராவிடர் நடாத்திய தீரப்போர் இது! இருந்தும்—

'சீதை என்ற பெண்ணாலேதான் அப்படி ஒரு செருக்களம் அமைந்தது எனும் நமது 'வழக்கமான' பேச்சையும் நாம் வம்பு என்று தள்ளிவிடுவதற்கல்ல—அதிலும் அர்த்தம் இருப்பதால்!

இதே போல—

சிறிமா என்ற ஒரு பெண்ணிற்குச் செய்யப்பட்ட அநீதியால் சிறிலங்கா (தென்னிலங்கை) மீண்டும் தீப்பற்றி எரிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

அந்நாட்டின் அரசியல் அலைகளின் ஆர்ப்பரிப்பு இதைத் தானே நமக்கு எடுத்துச் சொல்கின்றன!

'தர்மிஷ்டம்' பேசும் ஜே. ஆரின் அரசு தம்மிஷ்டப்படி நடக்கத் தலைப்பட்டதால் தர்ம தேவதையே அங்கு தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கின்றாள்!

புத்தபகவானின் போதனைகள் போன இடமே தெரியவில்லை—விலாசத்தை ஜே. ஆரிடம்தான் விசாரிக்கவேண்டும்!

இன்று—அந்நாட்டின் அரசியல் அலைகள் ஆடும் ஆட்டத்தைப்பார்த்து நாம் இவ்விதம்தான் எண்ணத் தோன்றுகின்றது!

தமிழீழ அரசியலிலும் ஓர் அலை சில மாதங்களாகத் தடம்புரண்டே வீசுகின்றது!

'அபிவிருத்திச் சபைகள் எனும் அந்த அலை வேகமாகவே வெடித்துக்கிளம்புகிறது!

வேசம் ஏற்றிய 'வாயுபகவான்கள்'வேறுயாராக இருக்க முடியும்?

அரசியலில் ஆதாயம் சம்பாதிக்க—தம்மையும் ஒரு தலைவராக ஆக்கிக்கொள்ள—தருணம் இதுதான் என உணர்ந்து கொண்ட அந்தப் 'பகவான்கள்' தமிழீழத்தைத் தலைவர்கள் விற்றுவிட்டார்கள் என்று தலையில் அடித்துக்கொள்கின்றன

பார்—பார்— பத்திரிகைகளே எங்கள் படைக்கலன்கள்—உங்களைப் பந்தாடி விடுவோம் — இப்படிப் பாய்ச்சல் காட்டுகின்றன!

பாயட்டும்—சலசலப்புக்கு அஞ்சுவது நமது சரித்திரமல்லவே!

தூக்குக் கயிற்றைக்கூட—கழுத்தில் தொங்கும் மாலையாகத் தொட்டுப்பார்த்து சிலிர்த்து நிற்பவர்கள் நாம்!

காகிதத்தில் 'மண்டபம்' கட்டி களிப்படைபவர்-தன்னை சோழன் கரிகாலனாகவே நினைத்துக்கொண்டிருக்கிறார்!

சரியான கலிகாலந்தான்—போங்கள்!

இத்தகையவர்களோடு சேர்ந்து சில 'இடதுகளும்' முனை மழுங்கிப்போன தங்கள் ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு மோதுகின்றன!

'அபிவிருத்திச்சபைகள்' ஏழை—எளிய மக்களுக்கு ஏற்றதில்லையாம். இது கொல்வின் வாசிக்கும் குற்றப்பத்திரிகை!

கொள்கையை விற்றுவிட்டார்கள் தலைவர்கள் எனக் குழறும் சில பல்கலைக்கழக மாணவர்கள் குடமுடைத்துக் குதூகலிக்கின்றார்கள்!

ஆக—'அபிவிருத்திச் சபைகள்' அலை தமிழினத் தலைவர்களை நோக்கித் தாவிப்பாய்கின்றது — தலைமையோ அசையாது மலைபோல் உயர்ந்து நிற்கிறது!

இது போதாதென்று—

அபிவிருத்திச் சபைகளை நாம் ஏற்றுக்கொண்டதால்— ஐக்கிய தேசியக் கட்சி அரசின் கொள்கைகளோடு ஐக்கியமாகி விட்டோம் என அர்த்தப்படுத்தி அமைச்சர் தேவநாயகம் அலசிவருகின்றார்!

அவர் அப்படி அலசத்தான்வேண்டும்—ஏன் தெரியுமா? அப்பகுதியில் வீசும் 'இன உணர்ச்சி' எனும் அலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் அவர்—அதை மறைக்க இப்படி ஏதாவது சொல்லத்தானே வேண்டும்! நன்றாகச் சொல்லட்டும்!

இதைவிட இன்னுமொரு அலை ஏறிக்கூத்தாடுகிறது!

'விலைவாசி' எனும் அவ்வலை விழுங்கும் ஜீவன்கள் எத்தனையோ இலட்சங்கள்......

விடியல் இல்லாத இரவுகளே தொடர்கின்றன! அலையை அடக்க ஆட்சித் தலைவர் ஜே.ஆரால் முடியுமா, என்ன'

முதலாளித்துவம் என்னும் மூட்டையைச் சுமந்து கூனிப்போன முதுகு அது! மோதவே இயலாது!

அணையை உடைத்துப்பாயும் அலையை—அந்நிய நாட்டுக் கடன் என்னும் மண் சாக்குக்கொண்டு அவர் மறிக்க முயல்கின்றாரென்றால்—கனவுலகில் சஞ்சரிக்கின்றார் என்றுதானே அர்த்தம்?

'சோசலிசம் வாழ்க' என்று சொக்கவைக்கும் மோகனம் பாடும் இந்த அலை முதலாளித்துவ முகாரிகேட்டு முகம் சுழிக்காமலா இருக்கும்?

மொத்தத்தில்—இரண்டு நாடுகளிலும் (சிறீலங்கா—தமிழீழம்) அலைகள் சில எழுந்து ஆர்ப்பரிக்கவே செய்கின்றன!

**ஆசிரியர் பேசுகிறார்**

## தலைவர் தொகுதியில் த. வி. கூட்டணி தனிப்பெரும் வெற்றி!

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கான புதிய இயக்குநர் சபைத்தேர்தல் 19 10.80 ஞாயிற்றுக்கிழமை மேற்படிச் சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட எழுவரும் தனிப்பெரும் வெற்றிபெற்றனர், அவர்களின் விபரம் வருமாறு; திருவாளர்கள். சி க. அன்றாஸ், ந அருணாசலம், சி, சோதிலிங்கம், அ. பொ. இராசையா, கா. பாலசுப்பிரமணியம், க, துரைமணி அ. செல்லத்துரை.

தகவல்: இ. குணநாயகம்

குடியுரிமை பறித்து கோலோச்சுவோரே...

# நாங்கள் மனிதர்கள் நீங்கள் தேவர்களா?

அத்தனகல எம்.பி. திரு. மதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையை நீக்க இந்த அரசு எடுத்திருக்கும் தீர்மானம் அரசியல் கொலைக்கு ஒப்பானதாகும். அதை நாம் ஆதரிக்க மாட்டோம்.

தார்மிகக் கொள்கையையும் நீதியையும் பற்றி வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வரும் இந்த அரசு அவரை மன்முறை சிறை வைக்கப்பட்டேன். அவசரகாலச் சட்டத்தின் கீழ் காங்கேசன்துறை இடைத்தேர்தல் இரு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது-

சுதந்திரத்துக்குப் பின் இரு கட்சிகள் சமகால அளவு நாட்டை ஆண்டுள்ளன. அந்த ஆட்சிகளின்போது நாம் பாதிக்கப்பட்டோம், இப்போதும்பாதிக்கப்பட்டே வருகிறோம், எனினும் நாம் எமது சம நிலையையும் நீதி உணர்வையும்கைவிடவில்லை.

தில் குற்றங்களாகக் கருதப்படவில்லை. உதாரணமாக அவசரகாலச்சட்டம் நீடிக்கப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்ட காலத்தில் ஒரு குற்றச் செயல் என்று கருதப்படவில்லை.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, சத்தைத்திணைக்களத்தோடு செய்துகொண்ட உடன்படிக்கையும் தவறாகக் கருதப்படவில்லை. அதுபோன்ற ஒரு உடன்படிக்கை தற்போதைய கம்புறுபிட்டி உறுப்பினர் செய்தமைக்காக அவர்

## நாடாளுமன்றத்தில் தலைவர் அமிர்

## சூடான கேள்வி?

விக்க வேண்டும். பிரேரணைகள் குறித்து மீளாய்வு செய்ய வேண்டும்.

இவ்வாறு வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்-

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையைஏழாண்டு காலத்துக்கு நீக்குவது அவரை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவது.முன்னாள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையைஏழாண்டு காலத்துக்கு ரத்துச் செய்வது ஆகிய பிரேரணைகள் மீதான விவாதத்தில் அவர் பேசினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் சொன்னதாவது:—

ஓர் எம்,பிக்கும் முன்னாள் அமைச்சருக்கும் எதிரான இந்த நடவடிக்கையை நீதிபதிகளின் ஸ்தானத்திலிருந்தே நாம மேற்கொள்ளப் போகிறோம் என்பதை உறுப்பினர்கள் மறக்கக் கூடாது. கசப்புணர்வுகளுக்கும் இதர உணர்ச்சிகளுக்கும் உள்ளாகாமல் அவர்கள் நீதி வழங்க வேண்டும்.

தற்போதைய அரசும்அதன் உறுப்பினர்கள் பலரும் கடந்த அரசின் ஆட்சியின்போது எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள் என்பதைப் பிரதமர் இங்கு எடுத்துக்கூறினார். அவர்களை விடக் கூடுதலாக நான் பாதிக்கப்பட்டிருக்கிறேன்.

அத்தனகல எம்.பி பிரதமராகப் பதவி வகித்த 12 வருடகாலத்தில் நான் மும்

இந்நிலையிலும் அரசு எடுக்க உள்ள நடவடிக்கையை நாம் எதிர்க்கிறோம். வேறெந்த நாடுகள் இதுபோன்றசந்தர்ப்பங்களில் எப்படி நடந்திருந்தாலும், கருணை மன்னிப்பு, மைத்திரி பற்றிப் போதிக்கும் பௌத்த மதமும், இந்து சமயமும், இஸ்லாமும் கடைப்பிடிக்கப்படும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் அரசியல் எதிராளிக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கை இதுவல்ல.

இதனால் ஏற்படக் கூடிய ஆபத்தையே, ஸ்ரீ ல.சு கட்சிப் பொதுக் கூட்டங்களில் பேசப்பட்டவையாக பிரதமரால் இங்கு வாசிக்கப்பட்ட பேச்சுக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எமது அரசமைப்பில் அடிப்படை மனித உரிமைகளுக்கு உத்தரவாத மளிக்கப்பட்டுள்ளன. அரசமைப்பின் பிரகாரம்.

ஒருவர் ஒரு செயலை அது குற்றம் என்று கருதப்படும் காலத்தில் செய்திருந்தால் மாத்திரமே குற்றம் என்று கொள்ள முடியும்.

அந்தக் குற்றத்துக்கு அந்தக் காலத்தில் என்ன தண்டனை உரியதோ அந்தத் தண்டனையை மாத்திரமே வழங்க முடியும்-

கடந்தகாலங்களில் நியமிக்கப்பட்ட கமிஷன்கள் இந்த உத்தரவாதத்தை மீறாமல் செயற்பட்டன.


ஆயின் அத்தனகல எம். பிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், அவற்றை அவர்செய்த காலத்

பதவி இழந்தார். ஆனால் பின்னர் அவரே கம்புறுபிட்டி எம்.பியாக நியமிக்கப்பட்டார். திரு. பீலிக்ஸ் செய்தது மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திலோ, கிராம நீதிமன்றத்திலோ அல்லது தேர்தல் நீதிமன்றத்திலோகூட அப்போது குற்றமாகக்கருதப்படவில்லை.

எனவே, அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை அரசமைப்பின் அடிப்படைகளையே மீறுவதாகும். அத்தனகல எம். பி. அரசியல் படுகொலைக்கு உட்படுத்தப்படப் போகிறார். இது அவருக்கு வழங்கப்படும்கூடுதலான தண்டனையாகும்.

விசாரணைக் கமிஷன்கள்நியமிக்கப்படுவதன் நோக்கம், குற்றங்கள்சம்பந்தமான உண்மைகளைக் கண்டுபிடிப்பதாகும். கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை ஆதாரமாக வைத்து சம்பந்தப்பட்டவர்களுக்குஎதிராகக் குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட, தாம்குற்றவாளியா? இல்லையா? என்பதை நிருபிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

இந்த அடிப்படையிலேயே இந்தியாவில் ஷா கமிஷனும் சர்க்காரியா கமிஷனும் நியமிக்கப்பட்டன. இதையே நாம் முன்னரும் எடுத்துக் கூறினோம். இந்த வாய்ப்பு வழங்கப்படும் என்றே வர்த்தக கப்பற்றுறை அமைச்சரும் (திரு. லலித் அத்துலத் முதலி) உறுதி



யளித்திருந்தார். ஆனால் விசேஷ ஜனாதிபதி விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்ட போது அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டது.

இன்று அரசு நாடாளுமன்றத்தில் தனக்குள்ள அறுதிப் பெரும்பான்மை பலத்தைக் கொண்டுதான் நினைத்த காரியத்தை நிறைவேற்றப்போகிறது.

அத்தனகல எம்பியும் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவும் தவறு இழைத்திருந்தால்பொதுமக்கள் அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும். திரு. பீலிக்ஸை நாடாளு மன்றத்திலிருந்து வெளியேற்றினார்கள். அத்தனகல உறுப்பினரை அத்தொகுதி மக்கள் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். அத்தனகல மக்கள் வழங்கிய தீர்ப்பை அரசாங்கம்மதிக்க வேண்டும்.

விசேஷ ஜனாதிபதி விசாரணைக்கமிஷன் கண்டுபிடித்த உண்மைகளை மக்கள் முன் வையுங்கள். மக்கள் அறியட்டும். அவர்களே தண்டனை வழங்கட்டும்.

நாமெல்லாம் மனிதர்கள். அரசாங்கக் கட்சியில் உள்ளவர்களெல்லாம் தேவதைகள் என்று அரசு நிருபிக்க முயல்கிறதா? இந்த அரசின் உறுப்பினர்களுக்கு எதிராகவும் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. தவறு செய்வது மனிதர்கள் இயல்பு.

அமெரிக்காவிலும் தவறு செய்த முன்னாள் ஜனாதிபதி நிக்ஸனைபின்வந்த ஜனாதிபதி போர்ட மன்னித்தார், அமைதி சமாதானம் ஜனநாயகம் ஆகியவற்றின் பெயரால் அதே வழியைஎமது ஜனாதிபதியும் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு தண்டனை வழங்குவதற்காக அரசு குற்றம் செய்ய அவர் அனுமதிக்கக்கூடாது.

அரசுடனும் ஸ்ரீ.ல,சு. கட்சியுடனும் நாம் கருத்து வேறுபட்ட போதிலும் எமது அரசியல் எதிராளிகளுக்குக் கூட இவ்வாறான தண்டனை வழங்கப்படுவதை ஆதரிக்க மாட்டோம். இலங்கை மக்களின் சாதாரண வாழ்வின் அமைதி குலைவதையும் குறுக்கிடப்படுவதையும் அனுமதிக்க மாட்டோம், இதனால் அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை ஏற்படா,

கடந்த அரசு சுமார் 10லட்சம் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்தது. அந்த மக்களின் ஏக பிரதிநிதியாக இன்று இச்சபையில் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரே அங்கம் வகிக்கிறார். எமது உரிமைகளைப்பெற நாம் மேற் கொண்டுள்ளபோராட்டத்தை நாம் கைவிடப் போவதல்லை. எமது வழியில் அதனை நடத்துவோம்.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

# பொலிஸ் - புத்தபிக்கு போர்க்கோலம்!

## யு. என். பி. தமிழருக்கே ஆபத்து!

மல்வத்தைக்கு அருகில் உள்ள தொட்டாச் சுருங்கி வட்டை காணி கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களால் விவசாயம் செய்யப்படும் காணிகளாகும்

கடந்த 11.10.80 அன்று தங்கள் காணிகளில் வேலையில் ஈடுபட்டிருந்த இக்கண்டத்து வட்டவிதானை க-செல்லையா அவர்களும் இப்பகுதிவிவசாய உத்தியோகஸ்தர் அவர்களும் புத்தாங்கலை பௌத்தபிக்கு சகிதம் வந்த பொலீசாரால் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்கள்-

இவர்கள் ஆளும்கட்சிஆதரவாளர்கள் எடுபிடிகள் அத்

—8-ஆம் பக்கம் பார்க்க

## சிங்கள ஏகாதிபத்தியத்தின்

# மாற்றாந்தாய் மனப்பான்மை

**காவலூர் பா.உ. திரு. கா. பொ- இரத்தினம் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் மாலை மரியாதைபெற்றுவிருந்துண்ட பிரதி அமைச்சருக்கும் அரசாங்கத்தின் கைப்பொம்மை யோகேந்திரா துரைசுவாமிக்கும் பாராளுமன்றத்தில் 26.9.80இல் தொடுத்த கண்டனக்கணைகளை கீழே தருகிறோம்:-**

**மிகவும் பிரதானமான ஒரு விடயத்தை இங்கு நான் குறிப்பிடவிரும்புகிறேன். இந்த நாட்டிலே தமிழ் மக்களைப் புறக்கணிக்கவில்லை புறக்கணிக்கவில்லை என்று சிங்கள அரசாங்கங்கள் சொல்கின்றன. மகாதேவாபாலவேலைக்கு இப்பொழுது பொது நிருவாக பெருந் தோட்டத் தொழில்துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சரவர்கள் 1966ஆம் ஆண்டிலே 28 இலட்சம் ரூபாவை ஒதுக்கி அங்கு வந்து அத்திவாரமும் இட்ட அந்தப்பாலத்தை இணைப்பதனால் வட பகுதியின் அபிவிருத்தி அதிகரிக்கும் என்ற காரணத்தை வைத்துக் கொண்டு பல தடைகளை ஏற்படுத்தி அம்முறை அந்தப்பால வேலை தடுக்கப்பட்டது,**

## 'மகாதேவா' பாலம் — ஓர் உதாரணம்

பல ஆண்டுகள் சென்றபின் கடந்த ஆண்டில் 1977ஆம் ஆண்டில்—அப்பால வேலைக்கு 10 ரூபா அடையாள வாக்குப் பணம்தான் ஒதுக்கப்பட்டது இன்னும் ஒருவேலையும் செய்யப்படவில்லை- இந்த ஆண்டிலே அடையாள வாக்குப் பணமும் ஒதுக்கப்படவில்லை, நாங்கள் இதற்குப் பொறுப்பாக விருக்கின்றபிரதம அமைச்சரவர்களுடன் தொடர்பு கொண்டு 1000 அடி தூரத்துக்காவது இந்த மகா தேவா பாலவேலை செய்யப்பட வேண்டுமென்று கேட்டதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது இந்தப்பாலவேலை எப்பொழுதுதொடங்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

### படகுச் சேவை — ஒரு விளக்கம்—

பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே நான் பிரதி அமைச்சர்களுக்கு இங்குஇதை சொல்ல வேண்டும். வேறு இடமில்லை. அவர் பிரதி அமைச்சராகப் பதவியேற்றுச் சிலநாட்களில் அங்கு வந்தார் அங்கே வந்தபொழுது அவருடைய காதிலே ஓதப்பட்டதை ஏற்றுக்கொண்டு அரசாங்க அதிபரின் முயற்சியால்தான் ''மணிமேகலை' கட்டப்பட்டது என்று சொன்னார், அது பொருத்தமற்றது, அந்த மணிமேகலையின் வேலைகள் இரண்டுஆண்டுகளாகச் செய்யப்பட்டு முடிக்கப்பட்டன,

குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குப் போகின்ற இயந்திரப்படகுச்சேவையைப் பெருவீதிகள் திணைக்களம் பல ஆண்டுகளாக நடாத்திவருகிறது இப்பொழுதுமணிமேகலை என்ற ஒருபடகு புதிதாகச் செய்யப்பட்டிருக்கிறது, சென்றஅரசாங்கம்தான் வட தாரகை மணிமேகலை என்ற இரண்டு படகுகளைச் செய்வதற்கு இலட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியது, அதிலே ஒரு படகுவடதாரகை முன்னரே செய்து சேவைக்கு விடப்பட்டது- இப்பொழுது மணிமேகலை சேவைக்கு விடப்பட்டுள்ளது. அந்தப்படகைச் சேவைக்கு விடுவதற்கான வெள்ளோட்டவைபவத்திற்கு அங்கு வந்திருந்த பிரதி அமைச்சரவர்கள் சிலகருத்துக்களைச் சொன்னார்கள். நான் அதனை மறுக்க வேண்டிய சந்தர்ப்பம் இது. மணி மேகலை என்ற இந்தப்படகுக்கும் அங்கே இருக்கின்ற அரசாங்க அதிபருக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை.

பெருவீதிகள் திணைக்களமே குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு அந்தச் சேவையை நடத்துகின்றபடியால் நான் பிரதம அமைச்சரிடம் குறிகட்டுவானில் இருந்து நயினாதீவுக்கும் ஊர்காவற்றுறையிலிருந்து எழுவைதீவு அனலைதீவு நயினாதீவுக்கும் போகும் இரண்டு சேவையையும் நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று கேட்டேன். முன்பு இருந்த அரசாங்கம் கட்டிக் கொடுத்தமணிமேகலைபோன்று மூன்று படகுகளைக் கட்டி அதில் ஒரு படகை அனலைதீவு—எழுவைதீவு சேவைக்கும் இரண்டுபடகுகளை நயினாதீவுச் சேவைக்கும் பயன்படுத்த வேண்டும்.

ஊர்காவற் றுறையிலிருந்து எழுவைதீவு அனலைதீவு— நயினாதீவுக்குஅலைஅரசி என்ற ஒரு படகுச் சேவையை இப்பொழுது திணைக்களம் நடத்தி வருகின்றது, குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குச் சென்று கொண்டிருந்த அலை அரசி என்ற படகு பழுதாகி இரண்டு ஆண்டுகளாகத் திருத்தப்படாமல் இருந்தது. இதுபற்றி எத்தனையோ தந்திகளையும் கடிதங்களையும் அனுப்பினேன். எத்தனையோ தொலைபேசிஅழைப்புக்கள் மூலம் தொடர்பு கொண்டு நான் அதைத் திருத்துவித்தேன் அரசாங்க அதிபர்தான் ஒரு சேவையைத்தொடக்க வேண்டும் என்பதற்காக அனலைதீவுமக்கள் கேட்கிறார்கள் என்று இந்தப் படகை எடுத்து ஒரு சேவையைத் தொடக்கிவைத்தார் இந்தப் படகுச்சேவை காலை மாலையில் ஒரு முறை மட்டும் நடைபெறுகிறது. இந்த அலை அரசி என்ற படகு ஆறு மணித்தியாலங்கள் நயினாதீவில் ஓடாமல் முடங்கிக் கிடக்கிறது. அதை மக்களுக்குப் பயன்படத்தக்கதாக மேலுமொரு சேவையில் ஈடுபடுத்துமாறு கேட்டேன். பணம் இல்லை என்று சொல்கிறார்கள்.

எனவே அரசியல் காரணத்திற்காக ஒரு சேவையைஅரைகுறையாகச் செய்து விட்டு அதைப் பத்திரிகைகளிலும் வெளியிட்டு நாங்கள் செய்துவிட்டோம் என்று அங்கிருக்கும் அரசாங்க அதிபரை ஒரு கைப்பொம்மையாக வைத்துக் காட்டிக் கொண்டிருக்க வேண்டாம், மக்களுக்கு உண்மையாகச் சேவைசெய்யவேண்டுமென்றால் அந்தப்படகு நயினாதீவில் ஆறு மணித்தியாலங்கள் முடங்கிக்கிடக்கக்கூடாது இடையில் மேலுமொரு சேவை அதாவது நயினாதீவு— ஊர்காவற்றுறைவரை அதைப் பயன்படுத்த வேண்டும், கௌரவ அமைச்சர் அவர்கள் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்,

### விருந்து —வீதி

மணிமேகலைப் படகை வெள்ளோட்டம் விடுவதற்காக அங்கே வந்த பிரதி அமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள வீதிகளைப் பார்த்துவிட்டு, நயினாதீவிலும் நெடுந்தீவிலும் உள்ள வீதிகளைத் திருத்துவதற்கு தனக்கு உடனே மதிப்பீடு அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டுவந்நார். அதன்படி அவருக்கு மதிப்பீடு அனுப்பப்பட்டது, அவர் அங்கேசொன்னதற்கு இணங்க அந்த மதிப்பீடுகளை உடனே அங்கீகரித்து அந்த வீதிகளைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அவர் சொன்னதைச் செய்யுமாறு கேட்பது அந்தப்பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி என்ற முறையில் எனது கடமையாகும், நான் புதிதாகஎதையும் கேட்கவில்லை: அங்கு மாலை மரியாதைகளைப் பெற்றுவிருந்துண்ட பிரதி அமைச்சர் அவர்கள் அந்த வீதிகளைத் திருத்துவதற்கு தனக்கு மதிப்பீடுகளை அனுப்புங்கள் என்று உத்தியோகத்தர்களிடம் சொன்னார் அதன்படி மதிப்பீடுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றை அங்கீகரித்து அந்த வீதிகளைத் திருத்த உடனே நடவடிக்கை எடுங்கள்:



### குறிக்கட்டுவான் பாலம்

குறிக்கட்டுவான் பாலத்துக்குச் சென்ற ஆண்டிலே 1979 ஆம்ஆண்டிலே —இரண்டுஇலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது! ஆனால் அந்தப் பணம் செலவு செய்யப்படவில்லை. இந்தஆண்டிலும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப்பணமும் செலவு செய்யப்படவில்லை. உங்களுக்குத் தெரியும் குறிக்கட்டுவான் பாலம் புங்குடு தீவிலிருந்து நயினாதீவுக்கும் நெடுந்தீவுக்கும் போகின்ற மக்களுக்குப் பயன்படுகின்றபாலமாகும் இதற்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவு செய்யப்படாமையால் அந்தப்பாலத்தை விரைவிலே கட்டி முடிக்க நடவடிக்கையெடுக்க வேண்டும்.

### பண்ணைப் பாலம்

பண்ணைப்பாலத்தை அகட்டுவதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டது கல்லும் குவிக்கப்பட்டது. இப்பொழுது அந்த வேலையை விரைவாகச் செய்ய வேண்டுமெனவும் மிகுதி வேலைக்கு அடுத்த ஆண்டுவரவு செலவுத்திட்டத்திலே வேண்டிய பணத்தை ஒதுக்க வேண்டுமெனவும்நான்கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தப் பண்ணைப் பாலத்தில் பல விபத்துக்கள் ஏற்பட்டுப்பலர் உயிரிழந்தமையால் இப்பண்ணைப் பாலத்தை அகட்ட வேண்டுமென்று சென்றஅரசாங்க காலத்திலேயே நான் கேட்டுச்சென்றஅரசாங்கமே இதற்குப் பணம் ஒதுக்க முன்வந்தது. என்றாலும்அதற்கிடையில் தேர்தல் வந்தபடியால் இந்த அரசாங்கம்பணம் ஒதுக்கி அரைப்பங்கு வேலையை செய்திருக்கிறது அடுத்த வரவு செலவுத்திட்டத்திலே வேண்டிய பணத்தை ஒதுக்கி இந்த வேலையை முடிக்க வேண்டும்.

### காரைநகர்—காவலூர்ப் பாலம்

1979ஆம் ஆண்டில் ஊர்காவற்றுறை—காரைநகர் பாலத்துக்கென ஓர் அடையாள வாக்குப்பணம் ஒதுக்கப்பட்டது. அப்பொழுது அதற்கு வேண்டிய மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டனஅதன் பின்னர் இந்த ஆண்டிலே— 1980ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில்— பிறநாட்டு உதவிகளுடன் செய்யப்படுகின்ற பாலவேலைகள் என்ற தலைப்பிலே ஊர்காவற்றுறை காரைநகர்பாலத்திற்கு அடையாள வாக்குப்பணம் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது பிறநாட்டு உதவிகள் கிடைத்து விட்டனவா? கிடைக்காவிட்டால் இந்நாட்டுப்பணத்திலேயே இப்பால வேலைகள் செய்யப்படுமா என்பதை நான் இங்கு இப்பொழுது பிரதம அமைச்சரவர்கள் இல்லாதபடியால் அதற்குப் பொறுப்பாக இருக்கின்ற பிரதி அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்டு அதற்கு ஒரு மறுமொழியை எதிர்பார்க்கின்றேன். அப்படிப் பிறநாட்டு உதவியோடு கட்ட முடியாமலிருந்தால் அடுத்த வரவு செலவுத் திட்டத்திலாவது இந்த ஊர்காவற்றுறை—காரைநகர் பாலத்துக்குப் பணம் ஒதுக்கி அதைக் கட்டி முடிக்க வேண்டும்.

# கிழவர்கள் செய்த கிளர்ச்சி!

கீர்த்தி என்று சொன்னாலே கிரேக்கர்களுக்கு ஒரு கிறு கிறுப்பு!

சீசர் ஆண்ட உரோமைக்குச் சீதனமாகச் சென்றது அந்நாட்டின் நாகரிகம்தான்!

இலியட் — ஒடிசி என்றும் மகா காவியங்கள் அங்கேதான் ஜனனம் எடுத்தன!

'தத்துவக் குழந்தை'களைப் பெற்றெடுத்த 'தாய்மாரும்' அந்தத் தரணியில் தான் அதிகம்!

தாலஸ் — பைத்தக்கொரஸ் — சோக்கிரட்டீஸ்—பிளேட்டோ— அரிஸ்ரோட்டில் முதலான 'தாய்மார்கள்' தங்கள் நாட்டின் வரலாற்றைத் தங்கத்தால் அல்லவா எழுதியிருக்கிறார்கள்!

கீழ்வானச் சூரியனும் கிழவன் சோக்கிரட்டீசும் ஒன்றேதான்!

அவன்தான் அந்நாட்டு இளைஞர்களின் உள்ளங்களை ஊடுருவிய ஒளிக்கதிர்!

ஒளியைக்கண்டு ஓடிய இருள்எங்கோ ஒளிந்து கொண்டது!

அந்த 'ஒளி' உரைத்த ஒரு வாக்கியம்—உன்னையே நீ அறிவாய்!

இந்த மொழி—இளசுகளின் இதயத்தில் ஏற்படுத்திய விளைவுகள் எத்தனையோ—பிளேட்டோ என்னும் பேரறிஞன் இதன் பிரசவக் குழந்தையன்றோ!

கிரேக்கத்திற்கொருகிழவன் சோக்கிரட்டீஸ் என்றால்— தமிழீழத்திற்கொரு கிழவன் தந்தை செல்வா!

தந்தையும் அதிகம் பேசுவதில்லை. அவர் சொன்னதும் சொற்பம் — அவற்றில் ஒன்று— தமிழா! உன்னை நீ உணர்ந்து கொள்!

தந்தை சொன்னதின் விளைவுகள்—தமிழீழம் —தளபதி அமிர்தலிங்கம்-இன்று தலைவராகவே உயர்ந்து நிற்கின்றார்!

கிழவன் சோக்கிரட்டீஸ்--தெளிந்த சிந்தனையை அங்குதெரு வெல்லாம் தெளித்தான்—அது ஒரு பள்ளிக்கூடமாகவே ஆயிற்று!

கிழவர் செல்வா—விடுதலை உணர்வு விதையைத் தான் விரும்பிய இடமெல்லாம் விதைத்தார்—அது ஒரு பாசறையாகவே உருவெடுத்தது!

இவர்கள் இருவரையும் சுற்றி இளைஞர்கள்— பலாப் பழத்தில் மொய்த்த ஈய்க்கள்போல! அவர்களில் —

விடுதலைக் கிழவர் செல்வாவின் பாசறை வீரர்களின் தலைவன் அமிர்தலிங்கம்!

ஒன்று சிந்தனையால் உலகை வென்றது!

இன்னொன்று விடுதலை வேட்கையால் உலகை வெல்லக் காத்திருக்கிறது!

'சுதந்திரம் இல்லையேல் சுடுகாடு சுகமே' இதுதான் நமது இலட்சியப்பாடல்!

இப்படியொரு பாடலை நமக்கு எழுதித்தந்தவர்யார்? கிழவர் செல்வா!

இந்தப்பாடலை நம் இதயத்தில் இறுக்ப் பதித்து விட்டவன் யார்? தலைவன் அமிர்!

இதைச் சொன்னால் சில இதயங்கள் எரிகின்றன! தனிநபர் துதிபாடலாமா? எனத் தத்துப் பித்தாகப் பேசவும் தலைப்பட்டு விட்டன!

ஆமாம்... அந்தக் கேள்வியில் அர்த்தம் இருக்கின்றது என்றால்......

நாம் சரித்திரப் புத்தகங்களையெல்லாம் சாம்பல் ஆக்கலாம்! பின்னே— அவற்றில் மட்டும் யாரைப்பற்றி எழுதியிருக்கிறார்களாம்!

ஒரு புத்தர்— ஒரு யேசு— ஒரு நபி— ஒரு காந்தி— ஒரு கார்ல்மாக்ஸ்— ஒரு லெனின்— ஒரு மகா அலக்சாந்தர்— ஒரு நெப்போலியன்— ஒரு சீசர்— ஒரு இராச இராச சோழன்— ஒரு சாம்ராட் அசோகன்...... இப்படித்தானே!

சிறு முயல்கள் எத்தனையோ—ஆனால் சிங்கங்கள்?

சரி— சரித்திரச் சாட்சியங்கள் போதும்! இலக்கியங்கள்......?

உலாக்களும் – காவியங்களும் ஊரில் உள்ள எல்லாரையுமா பாடின?

புலவர் நாவில் பொருந்தியது யார்?

புலவர்கள் பொய்யர்களென்றால்... சரித்திரம் எழுதியோரெல்லாம் சத்திரத்துப் பயணிகளோ?

உண்மைக்குத் திரைபோட ஒருசிலர் புறப்பட்டுத்தான் இருக்கிறார்கள்!

மேகங்கள் அவர்கள்— மெல்லவிலகிவிடுவார்கள்! உதயசூரியன் ஒளியை அவர்களும் ஒருநாள் வணங்கும் காலம் வரும்! அதுவரையும்—

'சுதந்திரம் இல்லையேல் சுடுகாடு சுகமே! இந்தப் பாடலைத்திரும்பத்திரும்ப பாடிக்கொண்டு—

தமிழீழம் எனும் தாய் நாட்டை நோக்கித் தானை நடத்துவோம்!

பார்ப்பவர்கள் சிலர்— நம்மைப் பைத்தியக் காரர்கள் என்று பரிகாசம் செய்யலாம்!

பரவாயில்லை! இலட்சிய வாதிகளுக்கு இது போன்ற பட்டங்கள் தானே இதம் தரும்!

சும்மா இருக்கும் வாய்கள் ஏதும் சொல்ல வேண்டாமா, சொல்லட்டுமே!

கிழவன் சோக்கிரட்டீசை கிண்டல் பண்ணாதவர்களா?

கிழவன் செல்வா கேட்காத வசைகளா?

நாம் மாரிமழையிலேயே நனைபவர்கள்... தூற்றல் கண்டா தூர விலகப் போகின்றோம்! எனவே—

நம் பயணம் நடக்கட்டும்— கவலையில்லை... கவிஞன் பாரதி பாடினானே கண்ணனைபபற்றி...

தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா—நின்னைத் தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா' என்று

அப்படி— வேதனைகளும் சோதனைகளும் நம்மைவிழுங்கும் போதெல்லாம்அவற்றில சுதந்திரத்தின் சுகத்தைச் சுகித்துக்கொண்டே செல்வோம்!

சுதந்திரம் என்ன சும்மாவா கிடைத்து விடப் போகின்றது?

தமிழகத்தின் இன்னொரு தலை சிறந்த கவிஞன் பாரதிதாசன் கேட்டானே — சுதந்திரம் என்ன சுக்கா? மிளகா? என்று!

விலை கொடுத்து வாங்கும் பொருள் அல்ல அது! தலைகொடுத்துப் பெறவேண்டிய பரிசு!

பயணம் தொடரட்டும் — பாதை மாறவே வேண்டாம்!

கிழவன் சோக்கிரட்டீஸ் கேள்விகள் கிரேக்கத்தை தலை நிமிரச் செய்தன.

கிழவன் செல்வாவின் வார்த்தைகள்—தமிழீழத்தையே உருவாக்கிவிட்டன!

இதை இளைஞர்கள் இதயத்தில் பதிக்க வேண்டும்.

செல்வா பிறவாதிருந்தால் நாமெல்லாம் செல்லாக் காசுகள்!

-- வாகரைவாணன்

## நிலையும்-நினைப்பும்

தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் ஏட்டை வெளியிடப் பேகின்றது என்ற செய்தி பரவியது. சொந்த அச்சகம் இல்லாமல் நடத்த நல்ல ஆளில்லாமல் எல்லாம் விலை ஏறுகின்ற இக்காலத்தில் எப்படி ஏடுவெளி வரப் போகின்றது என்று எண்ணி அமைதி கொண்டார் கூட்டணியின் பகைவர்கள்.

பின் மத்திய செயற்குழு உதயசூரியன் எனும் பெயருடன் ஓர் ஏட்டை வெளியிட முடிவு செய்தது- பத்திரிகைக் குழு ஒன்றையும் நியமித்தது எனும் செய்திவெளிவந்தது

இந்த செய்தியைப் பத்திரிகைகளில் படித்தவுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியை உடைத்துதள்ளிவிடலாம் தலைமைப் பீடத்தைத் தூக்கிவீசிவிடலாம்.

அரசியல் வாரிசு ஒருவரை ஆக்கலாம் பழிவாங்கலாம். எங்கள் ஏடுகளின் ஆற்றலைக் காட்டலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டு பகற்கனவு கண்டு பாசாங்கு செய்து துள்ளிக்குதித்துக் கொக்கரித்தவர்களின் வயிறு எரியத்தொடங்கியது,

பொய்யிலும் புரட்டிலும் புரண்ட சிலர் இந்த ஏடுவெளி வராமல் தடுப்பதற்குச் சூழ்ச்சிகளைச் செய்தனர்.

உதயசூரியன் என்ற பெயரை வைக்காமல் தடுக்கச் சூழ்ச்சி நடந்தது. ஏழெட்டு ஆண்டுகளுக்குமுன் வெளிவந்து மங்கி மறைந்துபோன ஓர் சினிமா ஏட்டுக்கு உயிரூட்ட முற்பட்டார் ஓர் ஈசன். அவருடைய வீட்டுக்கு அயலிலுள்ள ஒருவர் பனையாயிரம் ரூபாவை ஒரு பத்திரிகைக்குக் கொடுத்தால் உயிரூட்டும் முயற்சியைக் கைவிடுவதாகவும் ஒரு தொண்டரிடம் கூறினார். பகிரங்கக் கடிதம் ஒன்றும் வெளிவந்தது. அந்தக்கடிதத்தை உருவாக்கியவர் யார் என்பதை நிரூபிக்கச் சுதந்திரன் அந்தப் பகிரங்கக் கடிதத்தை வெளியிட்டு உதவியது. சூழ்ச்சிகள் பலிக்கவில்லை போட்டிப்பத்திரிகை நடத்தப்படுகின்றது. போட்டியை வளர்ப்பதற்குகொழும்பில் உள்ள சில பணமுதலைகள் இதற்குப் பணத்தை அள்ளி வீசுகின்றன: தந்தையின் பணத்தை ஒரு குமரனும் கொடுத்துக் குழப்பி அடிக்க உதவுகிறாராம். இரண்டொரு கிழமைக்குள் முடிவு தெரியும்.

## செயற்குழு பொதுக்குழுக் கூட்டங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள் நவம்பர் மாதம் 8ம் 9ம் திகதிகளில் முறையே செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், பா.உ. அவர்களின் இல்லத்தில் பி. ப. 2 மணிக்கும் த. வி. கூட்டணி தலைமைச் செயலகத்தில் காலை 10 மணிக்கும் நடைபெறும்!

# அமைச்சர் இராசதுரை அவர்களே! இதோ -

## தமிழ் மொழி அமுலாக்கலின் தனிச்சிறப்பு

தமிழ்மொழி இணைப்பு— மொழிப்பெயர்ப்பு எதுவுமே இல்லாத நிலையில் மட்டக் களப்பில் அமைந்துள்ள கிழக்குப் பிராந்திய கல்வி அலுவலகம் ET/B/8 இலக்கம் கொண்டதும் 5.8.80 திகதியிடப்பட்டதுமான தனிச்சிங்களமொழியிலான கடிதமொன்றை பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த மட்/களுவாஞ்சிகுடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர் திரு. வி. த. குமாரசாமி அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிகிறது. இதைப்பெற்றுக் கொண்ட ஆசிரியர்தமது தாய் மொழி தமிழ் என்னும், தமக்குத் தமிழ்மொழி ஒன்றைத் தவிர வேறுமொழி தெரியாது என்றும், ஆகவே தனக்கு விளங்கக்கூடிய தமிழ்மொழி கடிதத்தை அனுப்பிவைக்கும் படியும் கேட்டு தனிச்சிங்களக் கடிதத்தை மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளருக்கு திருப்பி அனுப்பிவைத்துள்ளார் என நமக்கு அறியக்கிடைத்துள்ளது.

இக்கடிதம் திருப்பி அனுப்பி ஒரு மாதமாகியும் அதற்கான தமிழ்க்கடிதம் தனக்குக் கிடைக்கவில்லையென ஆசிரியர் குறைபட்டுக்கொண்டார்.

தமிழ் மொழிக்கு புதிய அரசியல் சட்டத்தில் தேசிய மொழி அந்தஸ்துக் கொடுத்திருந்தும், தமிழ்மொழி அமுலாக்கத்துக்குமென அமைச்சர் ஒருவர் நியமிக் கப்பட்டும் தமிழ்ப்பகுதியிலிருந்து தமிழ்ப் பாடசாலையைச்சேர்ந்த தமிழ் ஆசிரியருக்கு சிங்களத்தில் மட்டும் கடிதம் அனுப்பப்படுகிற தென்றால் அரசாங்கம் தமிழுக்கு கொடுக்கும் சட்டமும் அதன் அமுலாக்கமும் எந்த அளவாக இருக்கிறது என்று இதிலிருந்து விளங்குகிறது. அல்லவா?

## மக்களாட்சி...

—1-ஆம் பக்கத் தொடர்ச்சி

உள்நோக்கம் என்று காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினிதிஸா நாயக்காவும் வர்த்தக கப்பற்றுறை அமைச்சரும் இங்கு நிலைநிறுத்த முயன்றார்கள்.

இப்போதைய ஜனாதிபதி கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதும் அத்தனகலை உறுப்பினரைத் தமது அமைச்சரவையில் சேருமாறு அழைத்தார் என்று உறுப்பினர் இங்கு நிகழ்த்தியஉரையிலிருந்து அறிகிறோம்.

அத்தனகலை உறுப்பினர் செய்த தவறுகளை அறிந்திருந்தும் அரசு அவரை எதற்காகத் தன்னோடு சேர்ந்து கொள்ளுமாறு அழைத்தது? இதற்கு விளக்கம் தரமுடியுமா?

மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் நாம் நினைத்த காரியத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று பிரதமர் அடித்துச் சொன்னார். நீதிமன்றத்தின்தீர்ப்புக்கு நாம் மதிப்பு அளிக்க வேண்டாமா?

''நீதிமன்றத்தின் தீர்ப்பு விசாரணைக் கமிஷன் சிபார்சு தவறான தென்றுஅமைந்தால், இன்று அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு அடிப்படையே இல்லாமற் போய்விடும்- அதனால்தான் இதனை வெறும் அரசியல்பழி வாங்கல் என்று சொல்கிறேன்.

''இந்த அரசு பதவியேற்ற போது மேல் நீதிமன்றத்தைச் சேர்ந்த ஐந்து நீதியரசர்கள் வெளியேற்றப்பட்டார்கள். சிலர் பதவி இறக்கப்பட்டார்கள். முன் தகுதியைக் கணிக்காமல் சிலருக்கு உயர்பதவி வழங்கப்பட்டது.

நீதியரசர்கள் நீக்கப்பட்டதாலேயே கமிஷனின் இரு உறுப்பினர்கள் நீதியரசர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

மேல் முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே விசேஷ ஜனாதிபதி விசாரணைக் கமிஷன் சட்டத்துக்கு ஆதரவாக நாம் வாக்களித்தோம் எமது நிபந்தனை நிராகரிக்கப்பட்டது.

சோவியத்யூனியனுக்கு அண்மையில் நான் விஜயம் செய்திருந்தபோது அங்குள்ள இலங்கைத் தூதுவர்எமக்கு விருந்துபசாரம் ஒன்றை அளித்தார். அங்கு அத்தனகலை உறுப்பினரும். அவருடைய காலஞ்சென்ற கணவரும் வெகுவாகப் பாராட்டப்பட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு மதிப்பை வெளியுலகில் வளர்த்துள்ள ஒருவர் மீது இவ்வாறான நடவடிக்கை எடுக்கும்போது அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

''நியாயம் நியாயம் என்று வாயாற் சொன்னால் மாத்திரம் எதுவும் நியாயமாகாது. செயலிலும் அது கடைப்பிடிக்கப்பட வேண்டும். இத்தருணத்தில் நீதிபதிகளின் ஸ்தானத்தில் நின்றுதீர்ப்புவழங்க வேண்டிய நாம் இதனை மறந்துவிடக்கூடாது.

''எமது இன்றைய நடவடிக்கை நாளை இந்நாட்டில் ஜனநாயகம் காக்கப்படுவதற்கு ஊறுவிளைவிப்பதாக இருக்கக் கூடாது''

இவ்வாறு திரு. சிவசிதம்பரம் சொன்னார்.


ரொமின், ஹறிலிஸ்ற் நீர் இறைக்கும்
இயந்திரங்கள், உதிரிப் பாகங்களின்
ஏகவிற்பனையாளர்கள்

**துர்க்கா ஓட்டோ காட்வெயர்ஸ்**

11, ஸ்ரான்லிறேட்
யாழ்ப்பாணம்.

**நீங்கள் மில்க்வைற் தயாரிப்புக்குத் தரும் ஆதரவின் பயன்**

— வசதி வாய்ப்பு, பயன் கருதி மரங்களை நடுதல்.
— வீட்டுத்தோட்டம் விருத்தி செய்தல்.
— பனை வளம் பெருக்கிப் பயன்பல பெறுதல்.
— பசளைதரும் செடிகள் மரங்களை உண்டாக்குதல்
— ஊர்கள்தோறும் குளங்களை ஆளமாக்கி மழை நீரைத் தேக்குதல்.

— சனசமூக நிலையங்களில் வாசிக்க வழி செய்தல்.
— பக்தி நெறியில் பரமனைப் பணிந்து வாழப் பயிற்றுதல்.
— எல்லோரும் எல்லோருக்கும் சேவை செய்தல்.
— வள்ளுவர் நெறியில் வையகம் வாழ வழி வகுத்தல்.
— எல்லோரும் யோகாசனம் பயில வைத்தல்.

*மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**மில்க்வைற்சவர்க்காரத்தொழிலகம்**
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


## சமத்துவ வழிபாடு

வடபகுதியில்உள்ள இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டினை ஏற்படுத்துமுகமாக அறவழிப் போராட்டக்குழு கடந்த இரு மாதங்களில்சகல தொகுதிகளிலும் ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டினை அறவழியில் ஏற்படுத்தியுள்ளனர்,

அறவழிப் போராட்டக்குழுவினர் 168ஆலயங்களில் 78ல் சமத்துவவழிபாட்டினை ஏற்படுத்தியமை பாராட்டக் கூடியதாகும்.

மீதியாகியுள்ள 90 ஆலயங்களிலும் சமத்துவ வழிப்பாட்டினை ஏற்படுத்துவதென்று இவர்கள் தொடர்ந்து போராடுவார்கள்!

## பொலிஸ் புத்...

5- ஆம்பக்கத் தொடர்ச்சி

தோடு மல்வத்தை ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராகவும் விசேட ஆணையாளராகவும் இருப்பவரின் உறவினர்கள் அவர்களுக்கே இந் நிலையென்றால் எம் நிலை என்னும் என்று பதட்ட நிலையில் இருக்கிறார்கள் இப்பகுதி விவசாயமக்கள்.

இது குறித்து அத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும்— பாதி மந்திரியாகவும் இருக்கின்ற அமைச்சர் வாய்மூடிமௌனியாக இருக்கின்றார் அன்று தீகவாபியில் 800, ஏக்கர் காணி பறிக்கப்பட்டபோது (முஸ்லிம் மக்களின் காணிகள்) அப்போது எங்கள் காணிகள் பறிபோகவில்லை. போகவும் விடமாட்டோம்என்றுமக்களுக்குமாயாஜாலம் காட்டிய அமைச்சர்கள் – இன்று மல்வத்தை பகுதியில் பறிபோய்க் கொண்டிருக்கும் நிலங்களைப்பற்றி என்ன சொல்வார்களோ தெரியவில்லை பொறுத்திருந்து பார்ப்போம்.

தகவல் மல்வத்தைதங்கத்துரை


எங்களிடம் எல்லாவிதமான பலசரக்குச் சாமான்கள் விற்பனைக்குண்டு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

**திருமுருகன்**
களஞ்சியம்

**சாந்தி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-30, 9-30

*100 வது நாளை நோக்கி...
வெற்றி நடை போடுகிறது!*

கமலஹாசன், ஸ்ரீபிரியா, விஜயகுமார், மஞ்சுளா,
ரவிச்சந்திரன், லதா, முத்துராமன், தீபா,
எம். என். நம்பியார், ஜெய்கணேஷ், ஸ்ரீகாந்த்
சுருளிராஜன் நடித்த

**நீயா?**

தன் காதலனை சுட்டுப் பொசுக்கிய ஆறு
இளம் வாலிபர்களை பழிவாங்கத் துடித்த
இத்தாரிப் பாம்பின் கதை.

(வயது வந்தவர்களுக்கு உகந்தது)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-30 9-30

*9 வது வாரமாக
வெற்றி நடை போடுகிறான்......*

ஜெய்சங்கர், ஜெயசித்ரா, ரோஜாரமணி,
அசோகன், எம் ஆர். ராதா, எஸ். பி. சுப்பையா,
பண்டரிபாய் நடித்த

அறிஞர் அண்ணாவின்

**வண்டிக்காரன் மகன்**

(ஈஸ்ட்மன் கலர்)

திரைக் கதை வசனம் கலைஞர் — மு. கருணாநிதி


உதயசூரியன் வெளியீட்டகத்தால்நல்லூர் சண்முகாபதிப்பகத்தில் 24-10-80 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.